

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.5.2025) சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ”தமிழரசு இதழ் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவுச் சிலையை திறந்து வைத்து, தொடக்கம் முதல் இன்று வரை ”தமிழரசு இதழின் வளர்ச்சி, வெளியிடப்பட்ட சிறப்பு இதழ்கள், சிறப்பு கட்டுரைகள் அடங்கிய கண்காட்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் ச. செல்வராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.5.2025) சென்னை தாமணியில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ”தமிழரசு இதழ் அலுவலகத்தில் ”தமிழரசு இதழின் அச்சிடும் பணிகளை நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ., கூடுதல் இயக்குநர் ச. செல்வராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அனைவரையும் ஒன்று போல் கருதி

# அன்புடன் சிகிச்சை தரும் செவிலியர்களுக்கு வாழ்த்துக்கள்!

## உலக செவிலியர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துக்கள்!

சென்னை, மே 13 –

அனைவரையும் ஒன்று போல் கருதி அன்புடன் சிகிச்சை தரும் செவிலியர்கள் அனைவர்க்கும் நல்வாழ்த்துக்கள் என்று உலக செவிலியர் தினத்தை யொட்டி வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உலக செவிலியர் நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**தன் எதிரில் உள்ள மனிதரின் பாலினம், சமூகத் தகுதி, சாதி - மதம் - நிறம் என எதைப் பற்றியும் சிந்திக்காமல் அனைவரையும் ஒன்றுபோலக் கருதி, அன்புடன் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும் தூய உள்ளங்களான செவிலியர்கள் அனைவருக்கும் உலக செவிலியர் நாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### மும்பை தி.மு.க. சார்பில்

# பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா!

## பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது!

மும்பை, மே 13 –

மும்பை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் திராவிட கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் 134வது பிறந்தநாள் விழா மற்றும் அவரது பிறந்த நாளை உலக தமிழ் வாரமாக அறிவித்த மாநில சுயாட்சி நாயகர், நமது உரிமையினை மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் மூலம் போராடிப் பெற்றுத் தந்த கழகத் தலைவருக்கு நன்றி பாராட்டும் விழா 11.05.2025 ஞாயிறு இரவு 7 மணிக்கு மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் நடைபெற்றது.

பொறுப்புக்குழு உறுப்பினர் ம. நீதிதுரை வரவேற்புரையாற்றினார்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு.மாணிக்கம், அன்பழகன் பொற்கோ, ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பாவேந்தர் பாரதிதாசனார் படத்தை பம்பாய் திருவள்ளுவர் மன்றம் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன் திறந்து வைத்தார்.

மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மராத்திய மாநில விசிக அமைப்புச் செயலாளர் சாலமோன் ராசா, மும்பை பகுத்தறிவாளர் கழகம் தலைவர் அ.ரவிச்சந்திரன் மற்றும் ஆ.பாலசுப்பிரமணியன், இரா.மதியழகன், எஸ்.பி.செழியன், பேலஸ்துரை, அப்துல் திவான் மைதீன், வே.ரவிச்சந்திரன் சேரை ச.பிரகாஸ், எம்.ராஜன் (Rdo), சுப.காளிமுத்து, அ.கண்ணன், சங்கர் திராவிட், பொய்சர் க.மூர்த்தி, பி.எஸ்.அழகுராஜா, கிருஸ்ணமூர்த்தி, பெருமாள், செல்வி க.அறிவுமதி,செந்தமிழரசி, அறிவுமலர் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மும்பை இலெமுரியா அறக்கட்டளை தலைவர் சு.குமணராசன் சிறப்புரையாற்றினார்.

தாராவி தி.மு.க. பிரமுகர் ஆர்.ரவிரஜினி நன்றி கூறினார்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட கோவூர் ஊராட்சி அக்ஷயா ரிபப்ளிக் குடியிருப்பு அருகில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு பூங்காவை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் உள்ளிட்டோர் உள்ளனர்.


